**நவம்பர் -17**

**"உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் (தூதுவர்கள்) கட்டளையிடுவார்." - சங் 91.11.**

அதாவது தேவன் சில உண்மையுள்ள மேய்ப்பர்களையும், போதகர்களையும் எழுப்புவார். அவர்கள் "உங்களுடைய ஆத்துமாக்களுக்காகக் கணக்கொப்புவிக்கிறவர்களாய் விழித்திருப்பார்கள்." உண்மைதான், கர்த்தருடைய வார்த்தையை குதர்க்கமாக அர்த்தம் செய்துகொண்டும், தந்திரமுள்ள ஏமாற்றுப்பேச்சினால் உங்களுடைய ஆத்துமாக்களை அழிக்க நாடிக்கொண்டும், கள்ளப்போதகர்கள் எழுந்திருப்பார்கள். ஆனால், தங்களுடைய விசுவாசத்தின் ஒவ்வொரு பகுதிக்கும், நேர்மையுள்ள இருதயத்தோடு தேவனுடைய பிள்ளைகள் "இவ்வாறு கர்த்தர் சொல்கிறார்" என்று சொல்லக்கூடியவர்களாய், தேவனுடைய வார்த்தையினால் எல்லாவற்றையும் கவனமாய் சோதித்துப்பார்ப்பார்களானால், உண்மையானதிலிருந்து பொய்யானதை முழுமனதுடன் அடையாளங் கண்டுகொள்ளக் கூடியவர்களாய் இருப்பார்கள். இவ்வாறு செய்தபிறகு நம்பிக்கை கொள்ளுமாறு அப்போஸ்தலன் புத்தி சொல்கிறார். (எபி 13.17) நம்முடைய மேய்ப்பராகிய கர்த்தர் உண்மையுள்ள ஆடுகளை விசாரிப்பார். **- Z '04, 75 (R 3331).**

தேவனுடைய தூதர்கள் பலதரப்பட்டவர்கள். சிலர் உயிருள்ளவர்கள். சில உயிரில்லாதவைகள். அவருடைய உயிருள்ள தூதர்கள் சில வேளைகளில் மானிடராகவும், சில வேளைகளில் ஆவியின் ஜீவிகளாகவும் இருக்கிறார்கள். தேவனுடைய பரிசுத்தவான்களைப் பாதுகாக்கும் ஊழியம், உயிருள்ள, உயிரில்லாத இந்த இரண்டு தூதர்களிடமும் சுமத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லலாம். ஆனபோதிலும்,விசேஷமாக இது அவருடைய உயிருள்ள தூதர்களுக்குப் பொருத்தமாய் இருக்கிறது. ஆவி, வார்த்தை இவைகள் சம்பந்தமில்லாத மற்ற வழிகளில் தேவனுடைய பிள்ளைகளைப் பாதுகாக்க ஆவிக்குரிய தூதர்களுக்குத் தெய்வாதீனமான கண்காணிப்புக் கொடுக்கப்பட்டிருக்கும்போது, சத்தியத்தின் வழிகளிலும், அதன் ஆவியின் வழிகளிலும், ஆவியானாலும், வார்த்தையினாலும் அவர்களைக் கவனித்துக்கொள்ள அவருடைய மாம்சப்பிரகாரமான தூதர்களுக்கு விசேஷித்த ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாத் தேவனுடைய பிள்ளைகளும் தங்களால் கூடுமானவரை ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய ஊழியம் சுமத்தப்பட்டிருந்தாலும், சபையில் இது போதகர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற பிரத்தியோகமான கவனிப்பாயிருக்கிறது. **- P '32, 167.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**ஆதி 19:16; 32:1,2; 1ராஜா 19:5; 2ராஜா 6:17; சங் 34:7; 68:17; 63:9; 103:20,21; தானி 3:28; 6:22; மத் 4:11; 18:10; லூக் 1:19; 2:9-14; 22:43; அப் 12:7; 27:23; எபி 1:14.**

**கோபுர வாசிப்பு : Z '13, 182 (R 5257).**

**வினாக்கள் : வாரத்தின் எந்த அனுபவங்கள் கர்த்தருடைய பாதுகாப்பைக் காட்டின? அவை எனக்கு என்ன பலன் அளித்தன?**